தினபூமி கோவை 6.9.2004 - 8

# நூல்வெளியீட்டு விழா

ஈரோடு, செப்.6-

எழுத்தர் பாஸ்கரதாசன் எழுதிய 'காளிங்கராயன் கதை' என்ற நூல் வெளியீட்டு விழா மற்றும் படம் திறப்பு விழா ஆகியன நேற்று ஈரோடு சம்பத் நகரில் உள்ள கொங்கு கலையரங்கில் நடைபெற்றது.

விழாவிற்கு எஸ்.கே.எம்.நிறுவனங்களின் தலைவர் எஸ்.கே.எம்.மயிலானந்தன் தலைமை தாங்கினார். விழாவில் கலந்து கொண்டு மத்திய சமூக நலத்துறை அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் காளிங்கராயன் படத்தை திறந்து வைத்து உரையாற்றினார்.

விழாவில் நீதிபதி ஆர்.செங்கோட்டுவேலன், நடிகர்கள் சிவக்குமார், சத்யராஜ், கொங்கு ஆய்வு மைய அமைப்பாளர் புலவர் ராசு, உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் செல்லமுத்து, கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவர் காளியண்ணன், யு.ஆர்.சி. நிறுவனங்களின் தலைவர் யு.ஆர்.சின்னசாமி, சக்தி மசாலா நிறுவனங்களின் தலைவர் பி.சி.துரைசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.